**பால்நிலையும் அபிவிருத்தியும் பரிசீலனைப் பட்டியல்**[1]

கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளான பகுதிகள் மற்றும் சமூகங்களிற்கு, பால்நிலை உணர்திறன் சார்பான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் போது, முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களை இப் பரிசீலனைப்பட்டியலானது தெளிவாக காட்டுகின்றது.

**பால்நிலை வேறுபாடுகளை பகுப்பாய்வுசெய்தல்**

- பால் மற்றும் வயது வேறுபாடின்றி சகலவிதமான தகவல்களும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.
- பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்கள் சம்மந்தமாக சேர்க்கப்பட்ட தகவல்கள்.
  - வேறுபட்ட திறன்கள், தேவைகள், பாதகத்தன்மைகள், குறைகள் மற்றும் பொறுப்புகள்.
  - வேலைவாய்ப்பிலுள்ள பால்நிலை வேறுபாடானது, முறைசார் மற்றும் முறைசார துறைகளிலும் பொறுப்புக்களிலும் அத்துடன் ஒரு குடும்பத்திற்குள்ளும் பின்பற்றப்படும் உபாயமாகும்.
  - வளங்களை அடைவதிலும், கட்டுப்பபடுதுவதிலுமுள்ள சமநிலையற்ற தன்மை (உதாரணம் நிலம்)
  - பாதிக்கப்படுபவரின் வீதம்
  - வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அதனை அடைவதற்கும் பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்கள் தடைகளை எதிர்நோக்குகின்றார்கள் (உதாரணமாக குழந்தைகளை பராமரித்தல் ,மற்றும் அன்றாட வீட்டுக்கடமைகள்)
- பால்நிலை பகுப்பாய்வானது திட்ட ஆவணங்கள் மற்றும் நிகழ்வு அறிக்கைகளில் பிரதிபலிக்கின்றன.
- மதிப்பீடு மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பெண்களும் ஆண்களும் பயிற்சியளிக்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

**வழிமுறைகள்**

- பெண்களுக்கும் யுவதிகளுக்கும் வாழ்வாதார நிகழ்வுகள் மற்றும் வாழ்வாதார சேவைகளில் கிடைக்கும் சமமான வாய்ப்பானது ஆண்களுக்கும் இளைஞர்களுக்கும் கிடைப்பதை போன்றதே.
- பெண்கள், யுவதிகள், ஆண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பானது உடனடி பரிசீலனை மற்றும் சமூகங்களுடனான கலந்துரையாடல்கள் போன்றவை மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது.
- கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான வாய்ப்புகள் உள்ளது.
- பெண்களுக்கும் ஆண்களுக்கும் தீர்மானம் எடுக்கும் நிலைகள் மற்றும் சமமான வாய்ப்புக்கள் வழங்குவதில் உள்ள தடைகளை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு அவர்களின் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கும், உதவிகளையும் முழுமையான பங்களிப்பையும் ஏற்படுத்த தேவையான உபயாங்கள் உள்ளன. (இது ஆண்கள் 50% பெண்கள் 50% என்பதை கருதவில்லை) இது கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளானவர்களையும் அதனைச் சார்ந்தோரையும் உள்ளடக்கியது.

[1] GICHD (2008) கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டை அபிவிருத்தியுடன் இணைத்தல்இ கொள்கை மற்றும் திட்ட அபிவிருத்திக்கான வழிகாட்டி, பக்கம் 116-119.
விபரமாக பார்க்க : http://www.gichd.org/fileadmin/pdf/ma_development/Guidelines/Guidelines-LMAD-NGOs-19Nov2008.pdf

- உற்பத்தி வளங்களை (உதாரணமாக நிலம், காடு, நீர், சந்தைகள், தொழில்நுட்பம், முதல்/கடன், கல்வி/பயிற்சி) அடையக்கூடியவர்கள் மற்றும் கட்டுப்படுத்தக்கூடியவர்கள் மீதே கவனம் செலுத்தப்படுகிறது.

**குறிக்கோள்**

- இத்திட்டத்தின் குறிக்கோள்கள் தெளிவாக பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்களை குறிக்கின்றது.
- இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பெண்கள், யுவதிகள், ஆண்கள், இளைஞர்களின் தேவைகளையும் முக்கியத்துவத்தையும் பிரதிபலிப்பதுடன், அவைகளை எடுத்துக்காட்டுகின்றன.

**செயற்பாடுகள்**

- பெண்கள் ஆண்கள் என்கின்ற பாரபட்சமின்றி பெண்களும், ஆண்களும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக, மரபுரீதியாக ஆண்களையே இலக்காக கொண்டு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வந்தன. ஆனால் இவை பெண்களுக்கும் ஆண்களுக்கும் வாய்ப்பளிப்பதை உறுதிசெய்யக்கூடியதாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
- வேலைவாய்ப்புக்களை புலப்பதிவு அடிப்படையில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வழங்காது, அவர்களின் தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் மற்றும் பால்நிலையை உணர்த்துகின்ற மனிதவள கொள்கைகளை விருத்திசெய்தல்.
- அபிவிருத்தி மற்றும் கண்ணிவெடி செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பெண்கள், யுவதிகள், ஆண்கள், மற்றும் இளைஞர்கள் சமமான பயனை பெற்றுக்கொள்ளுதல்.
- பால்நிலை புலப்பதிவானது தெளிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை உறுதிசெய்வதற்காக மேலதிக நடலடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.
  உதாரணமாக, பால்நிலை விடயங்கள் தொடர்பான பயிற்சிகள், மேலதிக ஆய்வுகள் போன்றன.

**அமுல்படுத்துதல்**

- திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர்கள் பால்நிலை முதன்மைத்துவப் பயிற்சியினை பெற்றிருப்பதுடன், இவ் நடவடிக்கைக்கு பொறுப்பான ஒருவரை பணிக்கு அமர்த்திக் கொள்வதன் ஊடாக பால்நிலை புலப்பதிவினை தொடர்ந்து அமுல்படுத்த முடியும். உதாரணமாக கண்ணிவெடியகற்றுவோர்/கண்ணிவெடி அகற்றும் உபகரணங்களை இயக்குவோர்.
- திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர்கள் அத்திட்டத்தின் ஒழுக்காற்று விதிமுறைகளுக்கு கட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்
- இந்நடவடிக்கையில் பால்நிலையை உணர்த்தும் ஆலோசனைகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.
- மதிப்பீட்டு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில், பெண் மற்றும் ஆண் அங்கத்தவர்கள் சம எண்ணிக்கையில் ஒரு ஒழுங்கு முறையில் தொடர்ந்து பங்குபற்றுவார்கள். உதாரணமாக கண்ணிணிவெடி அகற்றப்பட்ட நிலம் கையளிக்கப்பட்ட பின்னர் அது எவ்வாறு பயன்படுத்தப்படல் வேண்டும் என்பது சமூகத்திற்கான கண்ணிவெடியகற்றும் முன்னுரிமை அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது.
- பெண்கள் மற்றும் யுவதிகள் நிகழ்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக குழந்தை பராமரிப்பு, குடும்பப்பராமரிப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன.
- கண்ணிவெடி அபாயக் கற்கைநெறிக்கு பெண்கள், யுவதிகள், ஆண்கள், மற்றும் இளைஞர்கள் ஆகிய இருபாலருக்கும், கண்ணிவெடி அபாயக் கல்வி தொடர்பாக பயிற்சியளித்து பணிக்கு அமர்த்துதல்.
- கண்ணிவெடி அபாயக் கல்வியானது இருபாலருக்கும் கிடைக்கக்கூடியதாகவும், பெண்கள், ஆண்கள், யுவதிகள், இளைஞர்கள் ஆகியோரை பொருத்தமான இலக்காக கொண்டுள்ளதை உறுதிசெய்தல்.

- பெண்கள் மற்றும் ஆண்களுக்கு ஏற்றவகையிலும், பொருத்தமானதாகவும் சமூகமட்ட கூட்டங்கள் நடைபெறும் நேரமும் இடமும் உறுதிசெய்யப்படுதல்.
- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பிரத்தியேக ஆலோசனையினூடாக பெண்களின் முழுமையான பங்களிப்பினை உறுதிசெய்தல்.
- பெண்கள் மற்றும் ஆண்களுக்கான வைத்தியவசதிகள் மற்றும் பயிற்சிக் கல்வி வாய்ப்புக்களை உறுதி செய்வதற்காக, இருபாலாரிற்குகான தங்குமிட வசதிகளை ஏற்படுத்தல். இதன் மூலம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான வைத்திய வசதி மற்றும் பயிற்சி, கல்வி வாய்ப்புக்களை உறுதிசெய்தல். கண்ணிவெடி அகற்றுவோர், கண்ணிவெடி உபகரணங்களை இயக்குவோர் பாதிப்பிலிருந்து உயிர்தப்பியிருப்பின், அவர்களுக்கான மீள்ஒருங்கிணைப்பு செயற்பாடுகளிற்குரிய ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் போது பால்நிலையை உறுதி செய்தல்.
- திட்ட அமுல்படுத்தலில் பெண்கள், ஆண்களின் பங்களிப்பு.
- திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பெண்கள் மற்றும் ஆண்களுக்கு தேவைப்படும் பிரத்தியேக சலுகைகளை வழங்கல்.
- பெண் மற்றும் ஆண்களின் முழுமையான பங்களிப்பினை பெறுவதற்காக, இனங்காணப்பட்ட தடைகளை நீக்குவதற்கு உதவக்கூடிய உபாயங்கள் உள்ளன.
- யுவதிகள் இளைஞர்களின் விசேட தேவைகளை இலக்காக கொண்டு, தொழில்சார் பயிற்சிகள் மற்றும் முறைசாராக் கல்வி நிகழ்ச்சிகள் செயல்முறைப்பயிற்சியுடன் வழங்கப்படுகின்றன. இவை மரபுசார்பற்ற திறன்களையும் உள்ளடக்கி காணப்படுகின்றன.
- வேலைவாய்ப்புக்கள் – முறைசார், முறைசாரா தொடர்பாடல் ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக கண்ணிவெடி அகற்றுவோர்/கண்ணிவெடி அகற்றும் உபகரணங்களை இயக்குவோர் போன்றோர்க்கு, பெண்கள் மற்றும் ஆண்கள் சமமான வகையில் விண்ணப்பிக்க வாய்ப்பளிக்ககூடியதாகவும் அமைந்துள்ளது.
- நிகழ்ச்சிகளில் உள்ள அதிகார தொடர்புகளின் மாற்றங்களை சாத்தியமான, எதிர்மறையான தாக்கங்களை கொண்டு கண்காணித்தல். (உதாரணமாக பெண்களுக்கு அதிகாரமளிப்பதன் விளைவாக உள்ளூரில் குழப்பங்கள் அதிகரித்தல், பெண் கண்ணிவெடி அகழ்வாளர்களை பணிக்கு ஈடுபடுத்துவதன் விளைவாக சமூகத்தின் எதிர்ப்பு.)
- வேலைத்தளங்களில் காணப்படுகின்ற பால்நிலை பாரபட்சம் மற்றும் பால்நிலை வன்முறைகளை வெளிப்படுத்த வேண்டும்.
- பாதிக்கப்பட்ட சமூகத்தின் பல்வேறுபட்ட பிரிவினரின் முக்கிய தேவைகளுக்கு ஏற்றவாறு வாழ்வாதார நிகழ்ச்சிகளை மாற்றியமைத்தல் (பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், யுவதிகள், இளைஞர்கள், இடம்பெயர்ந்த பெண்கள், ஆண்கள், வயதுமுதிர்ந்தோர் கண்ணிவெடியினால் பாதிப்பிற்குள்ளானோர் மற்றும் கண்ணிவெடி தாக்கங்களிலிருந்து தப்பியோர், பெண், ஆண் மற்றும் கவனிப்பாளர்கள்.)

**கண்காணித்தலும் மதிப்பிடுதலும்**

- நடவடிக்கைகளில் பால்நிலை சமத்துவத்தை ஒருநிலையில் பேணுவதற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் இலக்குகளை அமைத்தல் (உதாரணமாக பெண்கள் மற்றும் ஆண்கள் பங்குபற்றலுக்கான இடஒதுக்கீடு.)
- கண்காணித்து மதிப்பீடு செய்வதற்காக பால்நிலை உணர்வுக்குறிகாட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குறிகாட்டிகள் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோரின் செயற்பாட்டின் சாதக, பாதகமான தாக்கவிளைவுகளை மதிப்பீடு செய்கின்றன. இக்குறிகாட்டிகள் அவற்றின் அளவினை சார்ந்தவையாகவோ அல்லது தரம் வாய்ந்தவையாகவோ அமையலாம்.
- பால்நிலை உறவுகள், ஒரு சமூகத்தினுள் மறைந்துள்ள அபாயங்களாக கருதப்படுகின்றன (உதாரணமாக ஒருநிலையான அமைப்பு ரீதியான தடைகள் ஒரு பாலாரையோ அல்லது மறுபாலாரையோ முழுமையாக பங்களிப்பதிலிருந்து தவிர்க்கின்றது.)
- இவ்வாறான தலையீடுகளில் மறைந்துள்ள எதிர்மறையான தாக்கங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன (உதாரணம் பெண்களின் வேலைச்சுமை அதிகரித்தல் அல்லது ஆண்களின் தனிமை நிலை )

- நிகழ்ச்சிகளுக்கு தேவையான பால்நிலை மற்றும் வயது சார்பான தரவுகளும் அதன் தாக்கங்களும் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பின்னர், ஒழுங்குமுறையில் ஒரு அறிக்கையாக வெளியிடப்படுகின்றன.
- பெண்கள் மற்றும் ஆண்களின் சுயநிர்ணயத்தினை முன்னேற்றம் அடையக்கூடியதாகவும் பயனாளிகளை திருப்தியளிக்கக்கூடிய வகையிலும் வாழ்வாதார நிகழ்ச்சிகள் அமைந்துள்ளதா என்பதை கண்காணித்தல்.
- நிகழ்சிகளில் காணப்படும் இடைவெளிகளையும் சமநிலையற்ற தன்மைகளையும் கருத்தில் கொள்ளக்கூடிய வகையில் திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

**வரவு செலவுத் திட்டம்**

- திட்டமிடப்பட்ட தலையீட்டில் இருந்து பெண்கள், ஆண்கள், யுவதிகள் மற்றும் இளைஞர்கள் பயனடையக்கூடிய வகையில் நிதி உள்ளீடுகள் பால்நிலையை உறுதிசெய்பவையாக இருக்கின்றன.
- பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான பிரத்தியேக நடவடிக்கைகளுக்காக வரவு செலவுத்திட்டத்தில் ஒரு ஒதுக்கீடு உள்ளடக்கப்பட்டுள்ளது. (உதாரணம்: பால்நிலை உணர்திறன் தொடர்பாக பயிற்சிகளை வழங்குவதற்கு அல்லது பால்நிலை சார்பான ஒரு நிபுணரை குறுகிய காலத்திற்கு பணிக்கு அமர்த்துவதற்கு.

.